# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2009 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, நிதி (திருத்தச்) சட்டம்

---

*(2009 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 31 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2009, ஏப்பிறல் மாதம் 03 ஆந் தேதிய* ***இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்*** II *ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது*

*கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்*

**விலை : ரூபா 6.00** **தபாற் செலவு : ரூபா 5.00**

### *2009 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, நிதி (திருத்தச்) சட்டம்*

[*2009 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 31 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.*]

*ச. வ. ஓ. 49/2008*

### *2002 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தையும் 2004ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தையும் திருத்துவதற்கானதொரு சட்டம்*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-*

*சுருக்கப் பெயர்.*

***1.*** *இச்சட்டம் 2009 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, நிதி (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.*

*பாகம்* I

### *2002 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தைத் திருத்துதல்*

*2002 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் I ஆம் பாகத்தின் 2 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

***2.*** *(இரண்டாயிரத்து ஆறாம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான) 2002 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் பாகம்* I *(துறைமுக, விமானநிலைய அபிவிருத்தி அறவீடு), அதன் 2 ஆம் பிரிவில் அப்பிரிவுக்கான முதலாவது காப்புவாசகத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும் :-*

> "ஆயின், மேலே குறிப்பீடுசெய்யப்பட்ட ஏதேனும் பொருளின் விலை, காப்புறுதி மற்றும் கேழ்வுப் பெறுமதி தொடர்பில்,-
>
> *(அ) 2004, நவெம்பர் மாதம் 19 ஆந் தேதியன்று தொடங்கி 2005, திசெம்பர் 31 ஆந் தேதியன்று முடிவடையும் காலப்பகுதிக்கு 1.5 சதவீதத் திலான அறவீடொன்றும் ;*

2-PL 003691 -225 (2009/02)

(ஆ) 2006, சனவரி 1 ஆந் தேதியன்று தொடங்கி 2006, திசெம்பர் 31 ஆந் தேதியன்று முடிவடையும் காலப்பகுதிக்கு 2.5 சதவீதத்திலான அறவீடொன்றும் ;

(இ) 2008, சனவரி 1 ஆந் தேதியன்று தொடங்கி 2008, திசெம்பர் 31 ஆந் தேதியன்று முடிவடையும் காலப்பகுதிக்கு 3.0 சதவீதத்திலான அறவீடொன்றும் ; அத்துடன்

(ஈ) 2009, சனவரி 1 ஆந் தேதியன்று தொடங்குகின்ற காலப்பகுதிக்கு 5.0 சதவீதத்திலான அறவீடொன்றும்,

விதிப்பனவு செய்யப்படுதலும் அறவிடப்படுதலும் வேண்டும்.".

இப்பாகத்தின் ஏற்பாடுகள் நடைமுறைக்கு வருதல்.

**3**. இப்பாகத்தின் ஏற்பாடுகள், எல்லா நோக்கங்களுக்காகவும், 2009, சனவரி 1 ஆந் தேதியன்று நடைமுறைக்கு வந்திருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

செல்லுபடியாக்குதல்.

**4**. சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதி.-

(அ) 2002, மே 1 ஆந் தேதியன்று தொடங்கி 2002, யூலை 8 ஆந் தேதியன்று முடிவடையும் ; அத்துடன்

(ஆ) 2009, சனவரி 1 ஆந் தேதியன்று தொடங்கி இச்சட்டம் தொடங்கும் தேதியன்று முடிவடையும்,

காலப்பகுதியின்போது, பொருளொன்றை இறக்குமதி செய்கின்ற ஆளொருவரிடமிருந்து, அத்தகைய பொருளின் விலை, காப்புறுதி மற்றும் கேள்வுப் பெறுமதியின்மீது முதன்மைச் சட்டவாக்கத்தின் 2 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்படுகின்றவாறான தொகைகளுக்குச் சமமான தொகையொன்றைச் சேகரிக்குமிடத்து, அத்தகைய சேகரிப்பு, எல்லா நோக்கங்களுக்காகவும், செல்லுபடியான முறையில் செய்யப்பட்டுள்ளதாகவும், செய்யப்படுகின்றதாகவும் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு, அத்தகைய சேகரிப்புத் தொடர்பில், எல்லாக் குடியியல் அல்லது குற்றவியல் வழக்குகளுக்கெதிராகவும் இத்தால் நட்டோத்தரவாதமளிக்கவும்படுகின்றது.

பாகம் II

## *2004 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தைத் திருத்துதல்*

*2004 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் II ஆம் பாகத்தைத் திருத்துதல்.*

**5**. இரண்டாயிரத்து எட்டாம் ஆண்டின் 7 ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான (இதனகத்துப் பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 2004 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் பாகம் II (செலுலர் செல்லிடத் தொலைபேசிச் சந்தாதாரர் அறவீடு சுமத்தல்), "செல்லிட அல்லது கம்பித் தொடர்பற்ற நிலத் தொலைபேசி" அல்லது "செலுலர் செல்லிடத் தொலைபேசி" என்னும் சொற்கள் அப்பாகத்தில் காணப்படும் இடங்களிலெல்லாம் அவற்றுக்குப் பதிலாக "தொலைபேசி" என்னும் சொல்லை இடுவதன்மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 14 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**6**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 14 ஆம் பிரிவு, "பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்." என்னும் சொற்களுக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது :-

> "பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும் :
>
> ஆயின், அத்தகைய பெறுமதி, அத்தகைய தொலைபேசியைப் பயன்படுத்துபவருக்கு மூன்றாம் திறத்தவரொருவரினால் வழங்கப்பட்ட சேவைக்கான பிரதிபயனாக அத்தகைய தொலைபேசியைப் பயன்படுத்துபவரிடமிருந்து தொலைபேசி இயக்குநரொருவரினால் சேகரிக்கப்பட்ட தொகையை உள்ளடக்குதலாகாது.
>
> "தொலைபேசி இயக்குநர்" என்பது, ஒரு செல்லிட, அல்லது பொருத்தப்பட்ட கம்பித்தொடர்பற்ற, அல்லது பொருத்தப்பட்ட கம்பியுடனான தொலைபேசியின் இயக்குநர் என்று பொருளாகும்.".

இப்பாகத்தின் ஏற்பாடுகள் நடைமுறைக்கு வருதல்.

**7**. இச்சட்டத்தினால் முதன்மைச் சட்டவாக்கத்தின் II ஆம் பாகத்துக்கும் 14 ஆம் பிரிவுக்கும் செய்யப்பட்ட திருத்தங்கள், எல்லா நோக்கங்களுக்காகவும், 2009, சனவரி 15 ஆந் தேதியிலிருந்து நடைமுறைக்கு வந்திருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

நட்டோத்தரவாதம்.

**8**. இரண்டாயிரத்து ஒன்பதாம் ஆண்டு, சனவரி 15 ஆந் தேதியிலிருந்து தொடங்கி, இச்சட்டம் தொடங்கும் தேதியன்று முடிவடையும் காலப்பகுதியின் போது, எவரேனும் பயன்படுத்துபவரிடமிருந்து எவரேனும் உரிமம்பெற்ற செல்லிடத் தொலைபேசி இயக்குநரினால் விதிப்பனவு செய்யப்பட்டுச் சேகரிக்கப்பட்ட அறவீட்டுத்தொகை, அவ்வாறு செல்லுபடியான முறையில் விதிப்பனவு செய்யப்பட்டு அறவிடப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய இயக்குநருக்கு, அத்தகைய அறவீடு தொடர்பில் ஏதேனும் குடியியல் அல்லது குற்றவியல் வழக்குக்கெதிராக இத்தால் நட்டோத்தரவாதமளிக்கவும்படுகின்றது.

ஏதேனும் ஒவ்வாமையின் விடயத்தில், சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**9**. இச்சட்டத்தின் சிங்கள தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்